JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **73/2018** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 5** | Prosecution /Defence / Court | |
| Name | **Krishnamoorthy (SSI)** | Village | சென்னிமலை |
| Father's Name | **Ponnusamy** | Taluk | |
| | | Age | |

**A1 to A3 present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 11.05.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் தற்போது சென்னிமலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரைண அதிகாரி உதவி ஆய்வாளர் திரு. மணி அவர்கள் பணி ஓய்வு பெற்று விட்டதால் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளிக்க முடியாத நிலையில் இருப்பதாலும், அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் என்பதாலும் அவருக்கு வழக்கு கோப்பை பார்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 24.03.2016 ம் தேதி சென்னிமலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்த திரு. மணி என்பவர் இருந்த போது ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனைப் பெற்று மருத்துவனைக்குச் சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சைப் பெற்று வந்து சேகர், த/பெ. சகாதேவன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து சென்னிமலை காவல் நிலைய குற்ற எண். 102/2016 சட்டபிரிவு 294 b, 323, 506(1) இ.த.ச. பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையுடன் வாதியின் புகாரையும் இணைத்து கணம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பெருந்துறை அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். **புகார் வாக்குமூலம்**

**அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. திரு. மணி அவர்கள் சம்பவ இடமான காமாட்சி அம்மன் கோவில் வாதியின் வீட்டிற்கு முன் சென்று 24.03.2016 ம் தேதி 19.35 மணிக்கு சம்பவ இட சாட்சிகள் கவின்குமார் மற்றும் பாபு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பார்வை மகஜரில் சம்பவ இட சாட்சிகள் இருவரிடம் சாட்சி கையொப்பங்களை பெற்றுள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் சாட்சிகள் 1 முதல் 4 வரை உள்ள சாட்சிகளை விசாரித்து அவர்களது வாக்குமூலத்தை தனித்தனியே பதிவு செய்துள்ளார். விசாரித்து எதிரிகளை பல இடங்களில் தேடி வந்த நிலையில் எதிரிகள் 1 முதல் 3 வரை உள்ள எதிரிகள் ஈரோடு, மாண்பமை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று விட்டதால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம் பட்ட லட்சுமி மற்றும் சேகர் ஆகியோருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. பாவேந்தன் அவர்களை 01.04.2016 ம் தேதி விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்து லட்சுமி மற்றும் சேகரின் காயச் சான்றிதழைப் பெற்றுள்ளார். **லட்சுமி மற்றும் சேகரின் காயச் சான்றிதழ் அ.சா.ஆ. 7 மற்றும் 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. காயச் சான்றிதழ் படியும், சாட்சி லட்சுமிக்கு எதிரிகள் மூவரும் பொது இடத்தில் கெட்ட வார்த்தையால் பேசியும், அடித்து காலால் உதைத்தும், மிளகாய்ப் பொடி முகத்தில் போட்டதும் தெரிய வந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294 (b), 323, 506(1) இதச வில் இருந்து 294b. 323, 324 , 506(1) இதச ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து 01.04.2016 ம் தேதி எதிரிகள் மீது 294 (b) , 323, 324 , 506(1) இதச ல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை